R 5250 (page 168)

# சகோதரர்களின் ஊழியம் ஒரு சரியான பக்தி வைராக்கியம்

# SERVICE OF THE BRETHREN A PROPER ZEAL

"உம்முடைய வீட்டைக்குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது;..." - சங்கீதம் 69:9

இந்த வார்த்தைகள் தாவீதின் காலத்தில் இருந்தவர்களுக்கு கவிதைநயம் பொருந்தியதாகவும் மிகைப்படுத்தி கூறியதாகவும் காணப்பட்டிருக்கும். தாவீது உண்மையிலேயே, தேவனுடைய வீட்டிற்காக முதலாவது ஆசாரிப்பு கூடாரத்தின் மேலும், அதைத் தொடர்ந்து ஆலயத்தின் மேலும் வைராக்கியம் உள்ளவனாக இருந்தான். அவன் ஆலயத்தை கட்ட ஆசையாயிருந்தான். ஆனால் அதை கட்ட தேவன் அவனுக்கு அனுமதியளிக்கவில்லை. தாவீது அந்த வீட்டின் மேல் உண்மையாக பக்திவைராக்கியத்தைக் கொண்டிருந்தான்.

இந்த தீர்க்கதரிசனத்திற்கான விளக்கத்தை நாம் புதிய ஏற்பாட்டில் நமது கர்த்தருக்கு அதை பொருத்திப்பார்ப்பதின் மூலம் பெறுகிறோம். இயேசு கயிற்றினால் ஒரு சவுக்கை உண்டுபண்ணி, காசுக்காரர்களை துரத்தினார். அப்பொழுது சீஷர்கள் நினைவுகூர்ந்து இந்த வார்த்தைகளை கூறினார்கள். "உம்முடைய வீட்டைக் குறித்து உண்டான பக்தி வைராக்கியம் என்னை பட்சித்தது." (யோவான் 2:17) அந்த காரியத்தில் ஆலயமானது கர்த்தருடைய வீடாக இருந்தது. சகல வியாபாரிகளையும் துரத்தி ஆலயத்தை சுத்தம் பண்ணின போது கர்த்தரின் வைராக்கியம் சிலரால் மிகவும் சரியானது என்றும் மற்ற சிலரால் மிகக்கடுமையானது என்றும் கருதப்பட்டது.

இன்னும் ஆழ்ந்த பொருளில், சபைதான் அவரது வீடு, தேவனுடைய வீடு என்று குறிப்பிடப்படுகிறது. அப்போஸ்தலர்கள் சபையைப் பற்றி பேசும் போது, நாம் பரிசுத்த ஆவியின் ஆலயம் என்று கூறுகிறார். (1 கொரிந்தியர் 6:19) மேலும் நாம் ஜீவனுள்ள கற்களாக கூட்டி கட்டப்பட்டு வருகிறோம் என்று கூறப்பட்டது. (1 பேதுரு 2:4,5) ஆகையால் இயேசு பெற்றிருந்த வைராக்கியம் தேவனுடைய உண்மையான வீடாகிய, பிள்ளைகளின் வீடாக இருக்கிறது என்று நாம் காண்கிறோம். யூதர்கள் மோசேயின் கீழாக ஊழியக்காரர்களின் வீடாக இருந்தார்கள். ஆனால் கிறிஸ்துவோ அவரது வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக இருந்தார். "நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மை பாராட்டலையும் முடிவு பரியந்தம் உறுதியாய் பற்றிக் கொண்டிருப்போமாகில் நாமே அவருடைய வீடாயிருப்போம்." ஏனெனில் "உங்களை அழைத்தவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்." (எபிரேயர் 3:5,6; 1 தெசலோனிக்கேயர் 5:24)

## ஊழியத்தின் ஆவி கிறிஸ்துவின் ஆவி

வீட்டைப் பற்றிய இந்த கருத்தை நாம் நமது மனதிற்கு முன்னே வைத்துக்கொண்டு, எந்த வழியில் தேவனுடைய வீட்டைக் குறித்ததான இயேசுவின் பக்தி வைராக்கியம் அவரை எரித்தது என்பதை நாம் பார்க்கலாம். எரித்தது, பட்சித்தது போன்ற வார்த்தைகளை இரும்பு துரு பிடித்தது என்பதற்கு ஒப்பாக பயன்படுத்துகிறோம். ஆகையால் வைராக்கியம் என்பது

சூடு, வெதுவெதுப்பு மற்றும் ஜுவாலையை குறிக்கிறது. ஆண்டவர் மற்றும் அவர் அக்கறை கொண்டிருந்த அவரது வீடு பற்றிய இந்த கருத்துகளை நமது மனதிற்கு முன்னே வைத்துக்கொண்டு சிந்திக்கும் போது அநேகரை தேவனுடைய வீட்டிற்குரியவர்களாகவும், தேவனுடைய குமாரர்களாகவும், தேவனுடைய ஜனங்களாகவும் ஆகும்படியாக தமது ஜீவனை கொடுப்பதற்கு அதற்கான அவரது வைராக்கியம், அவரது சக்தி, அவரை ஞாபகப்படுத்தி வழி நடத்தியது என்று நாம் உணருகிறோம். கர்த்தருடைய வீட்டிற்கான, கர்த்தருடைய பிள்ளைகளுக்கான அவரது பக்தி வைராக்கியம், அவர்களுக்கு உதவி செய்வதில் அவரது நேரத்தையும் பலத்தையும் பட்சித்தது.

இந்த சுவிசேஷ யுகத்தில், தம்மோடு கூட பட்சிக்கப்படும் படியாக சபையை கர்த்தர் அழைக்கிறார். அப்போஸ்தலர் தெளிவாக நமக்கு கூறுவது போல, இன்னும் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கக்கூடியவர்கள் மட்டுமே, பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். இந்த கிறிஸ்துவின் ஆவியை பெறுவோமானால் அது தான் ஊழியத்தின் ஆவியாக இருக்கும். அது நம்மை சபையில் ஊழியம் செய்ய ஆயத்தம்படுத்தும் ஒரு பக்தி வைராக்கியமாக, ஓர் ஆர்வமாக, ஒரு சக்தியாக இருக்கும். அவரது சரீரமாகிய அவரது சபையின் ஊழியத்தில் ஆண்டவரோடு கூட நாம் பட்சிக்கப்படுவோம் என்பதே இதன் பொருளாக இருக்கும். (மத்தேயு 20:28; 1 யோவான் 3:16)

## தெய்வீக சுபாவத்துக்கு தயார்படுத்துதல்

இப்படிப்பட்ட வைராக்கியத்தை வெளிப்படுத்துவதற்கு பரலோக தளத்தில் இருந்த தேவ புத்திரர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை. மனுக்குலத்தின் மீட்பில் இணைவதற்கான ஒரு அழைப்பும் அவர்களுக்கு கொடுக்கப்படவில்லை. இந்த சலுகை முதற்பேறானவராகிய லோகாசுக்கு கொடுக்கப்பட்டது. தமது ஜீவனை கொடுப்பதற்கு அவருக்கு சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது. அவர், "தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானர்; அவர் மனுஷரூபமாய் காணப்பட்டு, மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகிய தம்மைத் தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி..... எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்." (பிலிப்பியர் 2:7-9)

நமது கர்த்தரின் பக்தி வைராக்கியம் அவரது பரலோக இல்லத்தை, பரலோக சொத்தை இழக்கச் செய்யவில்லை. ஆனால் அதற்கு மாறாக, தேவன் அவரை ஓர் உயர்ந்த நிலைமைக்கு உயர்த்தினார். அவர் பட்சிக்கப்பட்டார் என்ற கூற்று, உலகிற்கு அவர் கொடுத்த அவரது பூமிக்குரிய ஜீவனைக் குறிக்கிறது. பிதாவானவர் அவருக்கு இன்னும் மேலான சுபாவத்தை, தெய்வீக சுபாவத்தை கொடுத்திருக்கிறார். இந்த பக்தி வைராக்கியம் பட்சிக்கப்படுவது அவரை தெய்வீக சுபாவமாகிய உயர்ந்த பரிசுக்காக தயார்படுத்தியது.

பரிசுத்த பேதுரு கூறுகிறதாவது: "திவ்விய சுபாவத்துக்கு பங்குள்ளவர்களாகும் பொருட்டு மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களை" கர்த்தர் கொடுத்திருக்கிறார். (2 பேதுரு 1:4) அப்போஸ்தலர் பவுல் கூறுகிறதாவது: "அவரோடு கூட பாடுகளைச் சகித்தோமானால். அவரோடு கூட ஆளுகையும் செய்வோம்; அவரோடு கூட மரித்தோமானால் அவரோடு கூட பிழைத்துமிருப்போம்." (1 தீமோத்தேயு 2:11,12) நமது பூமிக்குரிய சுபாவம் பட்சிக்கப்பட்டால் பிறகு நாம் தெய்வீக சுபாவத்தை பெறுவோம். "ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப் பொழுதிலே நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்." ( 1 கொரிந்தியர் 15:51,52)

தேவனுடைய ஊழியத்திற்கான பக்தி வைராக்கியத்தின் ஒரு நிறைவை வெளிப்படுத்தக்கூடிய இந்த சந்தர்ப்பம் ஆதாமுக்கோ, மனுக்குலத்தில் யாருக்கோ, இந்த சுவிசேஷ யுகம் வரை கொடுக்கப்படவில்லை. இந்த சந்தர்ப்பம் அடுத்த யுகத்தில் தேவனுடைய குமாரர்களுக்கு வராது. அப்பொழுது பலியானது முடிவடைந்திருக்கும். அங்கே பாவமோ, வருத்தமோ, வலியோ, தவிப்போ, அலறுதலோ அல்லது மரணமோ இராது! (ஏசாயா 35:10; 51:11; வெளிப்படுத்தல் 21:4)

"இயேசுவுக்கு இன்னும் ஒரு நாள் வேலை,
எனக்கு வாழ்க்கையில் ஒரு நாள் குறைவு!
ஆனால் பரலோகம் பக்கமாகிறது, கிறிஸ்து
அன்பாகிறார்; நேற்றையைக் காட்டிலும் எனக்கு;
அவரது அன்பும் வெளிச்சமும் என் ஆத்துமாவை
நிரப்பும் இன்றிரவு!

"இயேசுவுக்கு இன்னும் ஒரு நாள் வேலை!
எவ்வளவு மகிமையாயிருக்கிறார் என் ராஜா!
இது களிப்பு, கடமையல்ல, அவரது அழகை காண்பிப்பது;
எனது ஆத்துமா சிறகடித்து பறக்கிறது,
எப்படி கிறிஸ்து எனது ஜீவனை வாங்கினார்
என்ற வெறும் எண்ணத்தினாலேயே,

"இயேசுவுக்கு இன்னும் ஒரு நாள் வேலை!
எவ்வளவு இன்பமாக இருக்கிறது வேலை,
கதையை சொல்வது, மகிமையை காண்பிப்பது,
எங்கே நுழைகிறது, கிறிஸ்துவின் மந்தை!
எப்படி அது பிரகாசித்தது எனது தாழ்மையான இதயத்தில்!

"இயேசுவுக்காக ஆசீர்வதிக்கப்பட்ட வேலையே!
இயேசுவின் பாதத்தில் ஓய்ந்திரு!
உழைப்பு அங்கே களிப்பை காண்கிறது,
எனது தேவை புதையல்,
அவருக்கான வேதனை இன்பமாயிருக்கிறது.
கர்த்தாவே, நான் இருந்தால் இன்னொரு நாள் வேலை செய்வேன்!"

-----------------------------